
**செப்டம்பர் – 26**

# TNPSC துளிகள்

- சீனாவில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு உலக வேக சறுக்கு/ஸ்கேட்டிங் சாம்பியன்ஷிப் போட்டியில், இந்தியாவின் ஆனந்த்குமார் வேல்குமார் ஆடவர்களுக்கான 42 கிலோ மீட்டர் மராத்தானில் தங்கம் வென்றார்.
- முதலாவது இந்தியா-கிரீஸ் இருதரப்பு கடற்படைப் பயிற்சியானது இந்திய தரப்பில் ஐஎன்எஸ் திரிகண்ட் கப்பலின் பங்கேற்புடன் மத்திய தரைக் கடலில் நடைபெற்றது.
- அகல்யா பாய் ஹோல்கரின் மரபினை கௌரவிக்கும் வகையில் மகாராஷ்டிர மாநில அகமதுநகர் இரயில் நிலையம் ஆனது அதிகாரப்பூர்வமாக அகல்யாநகர் என மறு பெயரிடப் பட்டது.
- சீனாவில் நடைபெற்ற 73வது இன்லைன் ஸ்பீட் வேர்ல்ட் சாம்பியன்ஷிப் 2025 போட்டியில் ஜூனியர் ஆடவர் ஒற்றைத் தட குறுவிரைவோட்ட (ஒன்-லேப் ரோடு ஸ்பிரிண்ட்) போட்டியில் அனிஷ் ராஜ் வெண்கலம் வென்றார்.
    - இவர் 39.714 வினாடிகளில் நிறைவு செய்து, இந்தப் பிரிவில் பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையினை பெற்றார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சதுப்புநில மறுசீரமைப்பு




- தமிழ்நாடு-நிலையான கடற்கரை மற்றும் பெருங்கடல் வள திறன் (TN–SHORE) எனப் படும் தமிழ்நாடு கடலோர மறுசீரமைப்பு திட்டமானது 1,675 கோடி ரூபாய் மதிப்பில் ஆனதாகும்.
- உலக வங்கியானது இதற்கு 1,000 கோடி ரூபாய் பங்களிக்கும் என்ற நிலையில் மீதம் உள்ள நிதியை தமிழ்நாடு அரசு வழங்கும்.
- TN–SHORE திட்டத்தின் கீழ், 1,000 ஹெக்டேர் பரப்பிலான சதுப்புநிலங்கள் மீட்டெடுக்கப் படும் என்பதோடு இதில் 300 ஹெக்டேர் பரப்பிலான புதிய தோட்டங்கள் மற்றும் 700 ஹெக்டேர் தரமிழந்த பகுதிகள் அடங்கும்.

- சதுப்புநில மறுசீரமைப்பிற்காக 38 கோடி ரூபாய் ஆரம்ப தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.
- உள்ளூர் நிதி முடிவெடுக்கும் செயல்முறையினைச் செயல்படுத்துவதற்காக உலக வங்கி நிதியானது நேரடியாக கிராம சதுப்புநிலச் சபைகளுக்கு அனுப்பப்படும்.

# தேசியச் செய்திகள்

## பெரிய கப்பல்களுக்கு உள்கட்டமைப்பு அந்தஸ்து




- இந்திய அரசாங்கமானது, உள்கட்டமைப்புத் துறைகளின் இசைவான முதன்மைப் பட்டியலின் கீழ் பெரிய வணிகக் கப்பல்களுக்கு உள்கட்டமைப்பு அந்தஸ்தை வழங்கி உள்ளது.
- இந்திய உரிமை மற்றும் அந்தஸ்தின் கீழ் மொத்தம் 10,000 அல்லது அதற்கு மேற்பட்ட டன் கொண்ட வணிகக் கப்பல்கள் தற்போது இந்த அந்தஸ்துக்கு தகுதி பெறுகின்றன.
- மொத்தம் 1,500 அல்லது அதற்கு மேற்பட்ட டன் கொண்ட இந்தியாவில் கட்டமைக்கப் பட்ட கப்பல்களும் இதற்கு தகுதி பெறுகின்றன.
- உள்கட்டமைப்பு அந்தஸ்து ஆனது, எளிதான வெளிநாட்டு கடன் வாங்குதல், வரி இல்லாத பத்திரங்கள் மற்றும் இந்தியா உள்கட்டமைப்பு நிதி நிறுவனம் லிமிடெட் (IIFCL) போன்ற பிரத்தியேகமான கடன் வழங்கு நிறுவனங்களை அணுகுதல் போன்ற நன்மைகளை வழங்குகிறது.
- பெரிய கப்பல்கள் ஆனது, தற்போது 38 துணைத் துறைகள் உள்ள இசைவான முதன்மைப் பட்டியலில் போக்குவரத்து மற்றும் தளவாட துணைத் துறையாக சேர்க்கப் பட்டுள்ளன.
- கப்பல்களைக் கையகப்படுத்தல் மற்றும் தொழில் வளர்ச்சியை ஆதரிக்க 2025-26 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் 25,000 கோடி ரூபாய் கடல்சார் மேம்பாட்டு நிதி அறிவிக்கப் பட்டது.


## செயற்கை நுண்ணறிவினால் இயக்கப்படும் தணிக்கை அமைப்பு

- தணிக்கைச் செயல்திறனை மேம்படுத்துவதற்காக, இந்தியத் தலைமை கணக்குத் தணிக்கை அலுவலகமானது (CAG) செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் ஒரு பெரிய மொழி மாதிரியை (LLM) உருவாக்கி வருகிறது.

- செயற்கை நுண்ணறிவு அமைப்பு தணிக்கையாளர்கள் பல தசாப்த கால நிறுவன அறிவை அணுகவும், தணிக்கைப் பகுப்பாய்வில் நிலைத் தன்மையை அதிகரிக்கவும் உதவும்.
- இந்த அமைப்பின் முதல் பதிப்பு ஆனது 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் தயாராக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.




## ஒருங்கிணைந்த படைத் தளபதிகள் மாநாடு 2025




- இந்திய அரசானது காலாட்படை, கடற்படை மற்றும் விமானப் படையின் கல்விக் கிளைகளை ஒரே முப்படை கல்விப் படையாக இணைக்கிறது.
- புது டெல்லியில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்தப் படைத் தளபதிகள் மாநாட்டில் இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.
- இந்தச் சீர்திருத்தத்தின் கீழ் மூன்று புதிய கூட்டு இராணுவ நிலையங்கள் நிறுவப்படும்.
- ஒருங்கிணைந்தப் பாதுகாப்புப் பணியாளர்கள் (IDS) அமைப்பு ஒருங்கிணைக்கப்பட்ட கல்வி அமைப்பை நிர்வகிக்கும்.
- இந்த நடவடிக்கைகள் ஆயுதப் படைகளிடையே கூட்டுத் தன்மை மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

## உலகளாவிய வெப்பமண்டல வன நிதி




- என்றென்றும் நிலைக்கும் வெப்பமண்டலக் காடுகளுக்கான நிதிச் செயல்முறையில் (TFFF) முதலீட்டை மேற்கொள்ள உள்ளதாக அறிவிக்கும் முதல் நாடு பிரேசில் ஆகும்.
- இது உலகளவில் அருகி வரும் வெப்பமண்டலக் காடுகளைப் பாதுகாப்பதை ஆதரிக்கும் ஒரு பலதரப்பு நிதியாகும்.
- நவம்பர் மாதத்தில் பிரேசில் நடத்த உள்ள COP30 மாநாட்டிற்கு முன்னதாக, நியூயார்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையில் தனது முதலீடு குறித்து அறிவிக்க அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா திட்டமிட்டுள்ளார்.
- பிற நாடுகளையும் தனியார் முதலீட்டாளர்களையும் இதில் சேர ஊக்குவிப்பதற்காக "கணிசமான" ஆரம்ப கட்டப் பங்களிப்புடன் ஓர் அளவுருவினை அமைக்க பிரேசில் அரசாங்கம் இலக்கு நிர்ணயித்துள்ளது.
- TFFF ஆனது இறையாண்மை மற்றும் தனியார் துறை நிதிகளை இணைத்து, நாடுகளின் வருடாந்திர உதவித் தொகையை அவற்றின் மீதமுள்ள வெப்ப மண்டலக் காடுகளின் அடிப்படையில் செலுத்துவதற்கு 125 பில்லியன் டாலர் நிதியைத் திரட்டுவதை இலக்காகக் கொண்டுள்ளது.
- இந்த நிதிக்கான ஆரம்ப நிலை நிதி ஆதரவு சீனா, ஐக்கியப் பேரரசு, பிரான்சு, ஜெர்மனி, நார்வே, சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவற்றிலிருந்து பெறப் பட்டுள்ளது.
- பிரேசில் நாடானது, தனது முதலீடு மேலும் நிதி வழங்கீடு சார்ந்த உறுதிப்பாடுகளை ஊக்குவிக்கும் என்று நம்புகிறது என்பதோடு இது நிதியின் மீதான நம்பிக்கையைக் குறிக்கிறது மற்றும் உலகளாவியப் பருவநிலை நிதி ஒத்துழைப்பை ஊக்குவிக்கிறது.

## பாலஸ்தீனத்தின் அங்கீகாரம் 2025

- பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா மற்றும் போர்ச்சுகல் ஆகியவை பாலஸ்தீன அரசை அதிகாரப் பூர்வமாக அங்கீகரித்தன.
- காசா போர் குறித்த விரக்தியின் மத்தியில் இரு நாடுகள் தீர்வை ஊக்குவிப்பதை இந்த


நடவடிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- இஸ்ரேலுடன் அமைதியான சகவாழ்வை நோக்கிய ஒரு படிநிலையாக இதைக் கருதி பாலஸ்தீனத் தலைவர்கள் இந்த முடிவை வரவேற்றனர்.
- இந்த அங்கீகாரமானது இந்த மேற்கத்திய நாடுகளை பாலஸ்தீன அரசை ஆதரிக்கும் 140 க்கும் மேற்பட்ட நாடுகளுடன் இணைக்கிறது.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## GCHA அறிக்கை 2025




- உலகளாவியப் பருவநிலை மற்றும் சுகாதாரக் கூட்டணி (GCHA) ஆனது "Cradle to Grave: The Health Toll of Fossil Fuels and the Imperative for a Just Transition" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது.

- புதைபடிவ எரிபொருள்கள் ஆனது, கருப்பையில் உள்ள குழந்தை முதல் முதுமை வரையில் மனிதர்களைப் பாதிக்கின்ற பொது சுகாதார அவசரநிலையை ஏற்படுத்துகின்றன என்று இந்த அறிக்கை எச்சரிக்கிறது.
- இந்த அறிக்கை இந்தியாவின் நிலக்கரி மண்டலத்தில் குழந்தை பருவ ஆஸ்துமா, காசநோய் மற்றும் மாசுபாட்டுடன் தொடர்புடைய பிறவிக் கோளாறுகள் உள்ளிட்ட சுகாதாரப் பாதிப்புகளை எடுத்துக் காட்டுகிறது.
- புதைபடிவ எரிபொருள் மாசுபடுத்திகளுக்கு உட்படுவது அனைத்து வயதினரிடையேயும் கருச்சிதைவு, புற்றுநோய், இருதய நோய்கள் மற்றும் நரம்பியல் கோளாறுகள் ஏற்படும் அபாயங்களை அதிகரிக்கிறது.
- புதைபடிவ எரிபொருள் செயல்பாடுகளிலிருந்து வரும் நச்சு இரசாயனங்கள் பல தசாப்தங்களாக சுற்றுச்சூழலில் நீடித்து நிலைத்து இருக்கின்றன, இதனால் மனித தலைமுறைகளுக்கு இடையேயான சுகாதாரச் சேதம் ஏற்படுகிறது.
- சுரங்கங்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அருகிலுள்ள விளிம்பு நிலைச் சமூகங்கள் நோய், வறுமை மற்றும் இடப்பெயர்ச்சியால் அளவிற்கொள்ளாத வகையில் பாதிக்கப்படுகின்றன.
- புதிய புதைபடிவ எரிபொருள் சார்ந்தத் திட்டங்களை முடிவுக்குக் கொண்டு வருதல் மற்றும் மாசுபடுத்தும் நிறுவனங்கள் பொறுப்பேற்கும் கொள்கையை உடனடியாக அமல்படுத்துதல் உள்ளிட்ட அவசரக் கொள்கை மாற்றங்களை மேற்கொள்வதற்கு இந்த அறிக்கை அழைப்பு விடுக்கிறது.

## ஹுருன் இந்தியா அமைப்பின் செல்வ வள அறிக்கை 2025


| Rank | City | No. of Millionaire Households 2025 |
|---|---|---|
| 1 | Mumbai | 1,42,000 |
| 2 | New Delhi | 68,200 |
| 3 | Bengaluru | 31,600 |
| 4 | Ahmedabad | 26,800 |
| 5 | Kolkata | 26,600 |
| 6 | Chennai | 22,800 |
| 7 | Pune | 22,500 |
| 8 | Hyderabad | 19,800 |
| 9 | Gurugram | 10,100 |
| 10 | Surat | 5,700 |
| 11 | Jaipur | 4,800 |
| 12 | Vadodara | 4,600 |
| 13 | Nagpur | 3,700 |
| 14 | Visakhapatnam | 2,900 |
| 14 | Lucknow | 2,900 |

*Source: Hurun Research Institute; Mercedes-Benz Hurun India Wealth Report 2025*

- இந்தியாவின் முதல் பத்து மில்லியனர் மையங்களில் இரண்டாம் நிலை சார்ந்த ஏழு நகரங்கள் இடம் பெற்றுள்ளன என்று 2025 ஆம் ஆண்டு மெர்சிடிஸ் பென்ஸ் ஹுருன் இந்தியா அமைப்பின் செல்வ வள அறிக்கை கூறுகிறது.
- அவை அகமதாபாத், சூரத், ஜெய்ப்பூர், வதோதரா, நாக்பூர், விசாகப்பட்டினம் மற்றும் லக்னோ ஆகியவை வேகமாக வளர்ந்து வரும் மில்லியனர் குடும்பங்களைக் கொண்டு உள்ளன.

- முதல் பத்து மாநிலங்கள் இந்தியாவின் 79 சதவீதத்திற்கும் அதிகமான மில்லியனர் குடும்பங்களைக் கொண்டுள்ளன என்ற நிலையில் இது குறிப்பிட்ட பிராந்தியங்களில் செல்வக் குவிப்பை எடுத்துக்காட்டுகிறது.
- மும்பை, புது டெல்லி மற்றும் பெங்களூரு ஆகியவை அதிக எண்ணிக்கையிலான மில்லியனர் குடும்பங்களைக் கொண்ட முதல் மூன்று நகரங்களாக முன்னிலை வகிக்கின்றன.
- செல்வ வள மேலாண்மை புத்தொழில் நிறுவனங்கள், புதிய வாடிக்கையாளர்களில் சுமார் 30 சதவீதம் பேர் தற்போது முதல் 18 மாநிலத் தலைநகரங்களுக்கு வெளியே இருந்து வருவதாக தெரிவிக்கின்றன.
- ஜெரோதா மற்றும் க்ரோவ் போன்ற டிஜிட்டல் பங்கு தரகு தளங்களின் 80 சதவீதத்திற்கும் அதிகமான புதிய பயனர்கள் பெருநகரங்கள் அல்லாத நகரங்களைச் சேர்ந்தவர்களாக உள்ளனர்.

## உலகளாவிய நீர்வளங்களின் நிலை 2024





- உலக வானிலை அமைப்பு (WMO) ஆனது அதன் "உலக நீர்வளங்களின் நிலை 2024" அறிக்கையை வெளியிட்டது.
- 2024 ஆம் ஆண்டில், உலகளாவிய நதிப் படுகைகளில் சுமார் 60 சதவீதம் வறட்சி அல்லது வெள்ளப் பாதிப்புகளை எதிர்கொண்டன அதே நேரத்தில் மூன்றில் ஒரு பங்கு படுகைகளில் மட்டுமே சாதாரண நீரியல் நிலைகள் பதிவாகின.
- 2024 ஆம் ஆண்டில் ஆசிய-பசிபிக் பகுதியானது வானிலை, பருவநிலை மற்றும் நீர் தொடர்பான பேரழிவுகளால் அதிகம் பாதிக்கப்பட்டது.
- யாகி புயல் 850க்கும் மேற்பட்ட மக்களின் உயிரைப் பலி வாங்கியதோடு, வியட்நாம், மியான்மர், சீனா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் மற்றும் லாவோஸ் முழுவதும் 16 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான சேதத்தை ஏற்படுத்தியது.
- 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய பனிப்பாறைகளில் 450 ஜிகா டன் பனி இழப்பு பதிவாகியது என்ற நிலையில் இது 180 மில்லியன் ஒலிம்பிக் போட்டிகளுக்கான நீச்சல் குளங்களை நிரப்ப போதுமானது என்பதோடு மேலும் இது 1.2 மில்லிமீட்டர் அளவிலான கடல் மட்ட உயர்வுக்குப் பங்களித்தது.

## மாநில நிதி 2022–23 அறிக்கை

- தலைமைக் கணக்கு தணிக்கையாளர் (CAG) அலுவலகம் ஆனது, மாநில நிதி 2022–23 அறிக்கையை 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் தேதியன்று வெளியிட்டது.

- இந்த அறிக்கையானது, 10 ஆண்டுகளில் (2013–14 முதல் 2022–23 ஆம் ஆண்டு வரை) 28 மாநிலங்களுக்குமான விரிவான தரவு, பகுப்பாய்வு மற்றும் நிதி அளவுருக்கள் குறித்த போக்குகளை வழங்கும் முதல் அறிக்கையாகும்.
- 2022–23 ஆம் ஆண்டில், மாநிலங்களின் மொத்த கடன் ஆனது இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 22.17 சதவீதமாக இருந்தது.




- நிதி பொறுப்பு மற்றும் நிதி ஒதுக்கீடு மேலாண்மைச் (FRBM) சட்டம் (2003) ஆனது 2024–25 ஆம் ஆண்டிற்குள் மாநில அரசாங்கக் கடனுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 20 சதவீத வரம்பினை நிர்ணயிக்கிறது.
- பஞ்சாபில் அதிகபட்சமாக கடன்-GSDP (மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி) விகிதம் 40.35 சதவீதமாக இருந்தது.
- அதைத் தொடர்ந்து நாகாலாந்து (37.15 சதவீதம்) மற்றும் மேற்கு வங்காளம் (33.70 சதவீதம்) உள்ளன.
- 2022–23 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.76 சதவீதம் (குஜராத்) முதல் 6.46 சதவீதம் (இமாச்சலப் பிரதேசம்) வரையிலான நிதிப் பற்றாக்குறையை 28 மாநிலங்களும் பதிவு செய்துள்ளன.
- 2022–23 ஆம் நிதியாண்டில் மாநிலங்கள் அதன் நிதிப் பற்றாக்குறையை GSDP விகிதத்தில் 3.5 சதவீதமாக கட்டுப்படுத்துமாறு FRBM சட்டம் பரிந்துரைக்கிறது.
- ஹரியானாவில் 70 சதவீதத்திலிருந்து அருணாச்சலப் பிரதேசத்தில் வெறும் 9 சதவீதம் வரையாக உள்ளதுடன், மொத்த வருவாயில் மாநிலங்களின் சொந்த வரி வருவாய் (SOTR) பரவலாக வேறுபடுகிறது.
- வேளாண் கடன் தள்ளுபடி, இலவச அல்லது மானிய விலையில் மின்சாரம் மற்றும் பணப் பயன் பரிமாற்றம் போன்ற மானியத் திட்டங்களால் அதிகப் பொதுக் கடன் ஏற்படுகிறது.
- உறுதிப்பாடுகள் சார்பான செலவுகள் (எ.கா., சம்பளம், ஓய்வூதியங்கள், வட்டி செலுத்துதல்கள்) வருவாய் செலவினத்தில் 42 சதவீதத்திற்கும் அதிகமானப்

பங்கினைக் கொண்டிருந்தன என்பதோடு மேலும் பெரும்பாலான ஆண்டுகளில் GSDP விகிதத்தில் 6 சதவீதத்திற்கு மேலாக இருந்தன.

- பல மாநிலங்கள் தொடர்ந்து குறைந்த வருவாய் திரட்டலையும், சரக்கு மற்றும் சேவை வரியை அதிகமாகச் சார்ந்திருப்பதையும் காட்டுகின்றன.

# மாநிலச் செய்திகள்

## மன மித்ரா

**WHATSAPP GOVERNANCE**

- **Andhra govt's civic service initiative, Mana Mitra, gets Meta-backed WhatsApp onboard as a tool for digital services delivery**
- **161 civic services available now; 2 million users have already logged in**
- **Security, fraudulent documentation still a worry**

- ஆந்திரப் பிரதேச மாநில அரசானது மன மித்ரா எனப்படும் வாட்ஸ்அப் அடிப்படையிலான நிர்வாக தளத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.
- சேவைகளைப் பெறுவதற்கான அதன் அதிகாரப்பூர்வ வாட்ஸ்அப் எண் 9552300009 ஆகும்.
- மன மித்ரா அதன் முதல் கட்டத்தில் 36 துறைகளில் 161 பொதுச் சேவைகளை வழங்கும்.
- மன மித்ராவின் இரண்டாம் கட்டத்தில் கூடுதலாக 360 சேவைகள் சேர்க்கப்படும்.
- இந்தத் தளத்தின் மூலம் வழங்கப்படும் சான்றிதழ்கள் ஆந்திரப் பிரதேச அரசாங்க வலைத் தளத்துடன் இணைக்கப்பட்ட QR குறியீட்டைக் கொண்டிருக்கும்.
- முழு அளவிலான வாட்ஸ்அப் நிர்வாகத்தை செயல்படுத்திய உலகின் முதல் மாநிலம் ஆந்திரப் பிரதேசம் ஆகும்.

## குர்மி போராட்டம்

- மேற்கு வங்காளத்தின் புருலியாவில் ஆதிவாசி குர்மி சமாஜ் மீண்டும் போராட்டங்களைத் தொடங்க உள்ளன.
- மேற்கு வங்காளம், ஜார்க்கண்ட் மற்றும் ஒடிசாவின் சில பகுதிகளில் குர்மி சமூகத்தினர் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் அந்தஸ்து கோருகின்றனர்.
- 1931 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி குர்மிகள் பட்டியலிடப்பட்ட

பழங்குடியினராக வகைப்படுத்தப்பட்டச் சமூகங்களில் சேர்க்கப்பட்டனர் மற்றும் 1950 ஆம் ஆண்டுகளில் ST பட்டியலில் இருந்து அவர்கள் விலக்கப்பட்டனர்.

- 2004 ஆம் ஆண்டில், ஜார்க்கண்ட் அரசாங்கமானது இந்தச் சமூகத்தை இதரப் பிற்படுத்தப் பட்ட வகுப்பினராக (OBC) வகைப்படுத்துவதற்குப் பதிலாக ST பட்டியலில் சேர்க்கப் பரிந்துரைத்தது.
- ஜங்கல்மஹால் பகுதிகள் அல்லது மேற்கு வங்காளம், ஜார்க்கண்ட் மற்றும் ஒடிசாவின் சோட்டா நாக்பூர் பீடபூமி மற்றும் பீகாரின் சில எல்லைப் பகுதிகளில் அதிக எண்ணிக்கையில் காணப்படுவதுடன் குர்மிகள் பிரதானமாக ஒரு வேளாண் சமூகத்தினர் ஆவர்.
- 1950 ஆம் ஆண்டிற்குப் பிறகு, சுதந்திர இந்தியாவில் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் பட்டியல் தயாரிக்கப்பட்டபோது, குட்மிகள் அதில் இடம் பெறவில்லை.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### ஸ்டான்ஃபோர்டு–எல்சேவியர் தரவரிசை 2025




- டாக்டர் V. மோகன், 2025 ஆம் ஆண்டிற்கான ஸ்டான்ஃபோர்டு–எல்சேவியர் பட்டியலில், உலகின் முன்னணி 2% அறிவியலாளர்களில் ஒருவராக இடம்பெற்றுள்ளார்.
- அவர் சென்னை நீரிழிவு ஆராய்ச்சி அறக்கட்டளையின் தலைவராகவும், டாக்டர் மோகன் நீரிழிவு நோய் சிறப்பு சிகிச்சை மையத்தில் தலைமை நீரிழிவு நிபுணராகவும் உள்ளார்.
- இவர் இந்தியாவில், புலன் மருத்துவம்/நாளமில்லா சுரப்பியியல் மற்றும் வளர்சிதை மாற்றப் பிரிவில் முதலிடத்தில் உள்ளார்.
- 2025 ஆம் ஆண்டு பட்டியலில் பட்டியலிடப்பட்டுள்ள சிறந்த அறிவியலாளர்களில் அவரது உலகளாவியத் தரவரிசை 3,087 ஆகும்.
- முதல் 10 இடங்களில் உள்ள மற்ற இந்திய அறிவியலாளர்களில் அனூப் மிஸ்ரா, C.S.யாஜ்னிக், A. இராமச்சந்திரன் மற்றும் விஜய் விஸ்வநாதன் ஆகியோர் அடங்குவர்.

# முக்கிய தினங்கள்

## சமூக நீதி தினம் 2025 - செப்டம்பர் 17

- இத்தினமானது ஈ.வெ. இராமசாமி (பெரியார்) பிறந்த நாளைக் குறிக்கிறது.
- இவர் திராவிடர் கழகத்தைத் தொடங்கிய இந்தியச் சமூக ஆர்வலர் மற்றும் அரசியல்வாதி ஆவார்.
- அவர் 'திராவிட இயக்கத்தின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார்.
- தாழ்த்தப்பட்ட சாதியினரிடையே பெருமிதத்தினை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட சுயமரியாதை இயக்கத்திற்காக அவர் மிகவும் பிரபலமாக அறியப் படுகிறார்.
- பகுத்தறிவு, சுயமரியாதை, பெண்கள் உரிமைகள் மற்றும் சாதி ஒழிப்பு ஆகிய கொள்கைகளை அவர் ஊக்குவித்தார்.
- உலக சமூக நீதி தினமானது ஆண்டுதோறும் பிப்ரவரி 20 ஆம் தேதியன்று அனுசரிக்கப் படுகிறது.



## சர்வதேச அமைதி தினம் 2025 - செப்டம்பர் 21




- மிகவும் நிலையான சமூகங்களை உருவாக்குவதில் அகிம்சை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் சபை இந்த நாளை நிறுவியது.
- ஒவ்வோர் ஆண்டும், உலகளாவிய ஒற்றுமை மற்றும் அகிம்சையின் அடையாளமாக நியூயார்க்கில் உள்ள ஐ.நா. தலைமையகத்தில் அமைதி மணி (ஜப்பானிலிருந்துப் பரிசாகப் பெறப்பட்டது) ஒலிக்கப்படுகிறது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Act Now for a Peaceful World" என்பது ஆகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★